தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 44 | thalaivaasaltv@gmail.com | ஞாயிற்றுக்கிழமை | நவம்பர் 15, 2020



## ஜனாதிபதி கோட்டாபய நாட்டு மக்களுக்கு விஷேட உரை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு விஷேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய அவர் இம் மாதம் 18ஆம் திகதி அதாவது எதிர்வரும் புதன்கிழமை விஷேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளதாக அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா தொற்று நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

## களுத்துறையில் 803பேருக்கு கொரோனா தொற்று

களுத்துறை மாவட்டத்தில் இதுவரை 803பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அப்பிரதேச சுகாதாரச் சேவை பணிப்பாளர் உதய ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, "களுத்துறையில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களில், 18 பேர் கர்ப்பிணிகள் என்பதுடன், 9 பேர் பல்வேறு நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள்.

குறித்த தொற்றாளர்களில் 121பேர் ஹொரணை பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், களுத்துறை- அகலவத்தை பகுதியில் 23 பேரும்,பண்டாரகம பகுதியில் 70 பேரும், புளத்சிங்கள பகுதியில் 41 பேரும், தொடங்கொட பகுதியில் 04 பேரும், பேருவளை 03

## 250 பேருக்கு மேல் கலந்து கொண்ட கூட்டத்தினை ஏன் தடுக்கவில்லை பொலிசாரிடம் சிறீதரன் எம்.பி கேள்வி



யாழ்ப்பாணத்தில் இரண்டு நாட்கள் கொழும்பில் இருந்து வந்த அமைச்சர்களின் 250 பேருக்கு மேல் கலந்து கொண்ட கூட்டத்தினை ஏன் தடுக்கவில்லை என பொலீசாரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் இன்று கேட்டார்

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இன்று சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.


சிரமதானப் பணிகள் இடம் பெற்றுக் கொண்டிருக்க கிளிநொச்சி பொலிசார் வருகை தந்து சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தினர்.

பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களிடமும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜா வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பசுபதிப்பிள்ளை கரைச்சி 03

# அரியாலைவாசிக்கு கொரோனா

### 15 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்

லண்டன் பயணம் செய்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்றிருந்த ஒருவருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்ட நிலையில் அவருடன் நெருக்கமானவர்கள் மற்றும் தொடர்புடையவர்கள் என 61 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். 03



## யாழில் 600 குடும்பங்கள் தனிமைப்படுத்தலில்

யாழ் மாவட்டத்தில் தற்போது 600 குடும்பங்கள் தனிமைப் படுத்தலில் உள்ளதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுடன் நேரடியாக தொடர்புபட்ட, தொற்றுக்குள்ளானவர்களுடன் பயணித்த சுமார் 600 குடும்பங்கள்சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் நேற்றைய தினம் மேலும் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர் ஏற்கனவே தனிமைப் படுத்தலில் இருந்தவர் எனினும் அவருடன் நேரடியாக தொடர்பு 03

## இன்று கொரோனா 544 பேருக்கு தொற்று; 5 பேர் பலி

இலங்கையில் இன்று 5 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.


அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 58 ஆக அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறு உயிரிழந்தோர் அனைவரும் ஆண்களாவர்.

54, 39, 88, 79 மற்றும் 88 வயதுகளையுடையவர்ளே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையில் மேலும் 544 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் ஷவேந்திர சில்வா 03

## பளை தம்பகாமத்தில் இளைஞன் வெட்டிப் படுகொலை




யாழ்ப்பாணம் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தம்பகாமம் பகுதியில் இளைஞர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இன்று நண்பகல் இடம் பெற்றதாகக் கூறப்படும் இச் சம்பவத்தில் கொலை செய்யப்பட்ட இளைஞனின் கழுத்து, முகம், கை, கால் என சகல இடங்களிலும் சரமாரியாக வெட்டப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்குட்பட்ட தம்பகாமம் ஊடாக மாமுனை செல்லும் வீதியில் செம்பியன்பற்று வடக்கு மாமுனையை சேர்ந்த தனபாலசிங்கம் குலசிங்கம் 03

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று




ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தொம்பே பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

குறித்த குடும்ப உறுப்பினரில் ஒருவர், துறைமுகத்தில் பணியாற்றுபவராவர். இந்நிலையில் அவருக்கு கொரோனா 03

## யாழில் சுயதனிமைப்படுத்தப்பட்ட தனியார் பேருந்து சாரதியும் நடத்துனரும்



யாழ்ப்பாணம் - பருத்தித்துறை 750 வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து ஒன்றின் சாரதி மற்றும் நடத்துனர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தீபாவளி திருநாளுக்கு முதல் நாளான நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி பயணிகளை ஏற்றிச் சென்றமை தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் கண்டறியப்பட்டு வழங்கப்பட்ட அறிக்கைக்கு அமைய கரவெட்டி 03

தரணி எங்கும் தமிழராய் இணைவோம்

## நேற்று 389 பேருக்கு கொரோனா தொற்று!

நாட்டில் நேற்று 389 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொற்று கண்டறியப்பட்டவர்கள் அனைவரும் ஏற்கனவே தொற்று கண்டறியப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மினுவாங்கொட மற்றும் பேலியகொட மீன் சந்தை கொரோனா கொத்தணியில் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்தைக் கடந்து 13 ஆயிரத்து 84ஆக அதிகரித்துள்ளது.


இந் நிலையில் நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 583ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து இன்று மட்டும் 214 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இதுவரை பதினொராயிரத்து 324 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந் நிலையில், இன்னும் ஐயாயிரத்து 206 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றினால் இதுவரை 53 பேர் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாவை தலைமையில் தமிழர் தேசிய சபை?



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா தலைமையில் தமிழர் தேசிய சபை என்ற பெயரில் புதிய அமைப்பை உருவாக்க முயற்சிகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளை அடைந்துக் கொள்வதற்காக இத்தகைய புதிய அமைப்பை உருவாக்க முயற்சிகள் இடம்பெற்று வருவதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில் மாவை சேனாதிராஜா, குறித்த விடயம் தொடர்பாக தற்போதைய நிலைமையில் எந்தவிளக்கத்தையும் வழங்க முடியாது என்று கூறியுள்ளார்.

## யாழ். பல்கலைக்கழக பேரவைக்கு புதிய உறுப்பினர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவைக்குப் புதிய உறுப்பினர் ஒருவர்நியமனம்செய்யப்பட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பீடங்களின் பீடாதிபதிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஈடுசெய்யும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறையின் முன்னாள் தலைவரும், வாழ் நாள் பேராசிரியருமான ஞானமுத்து பிலேந்திரன், 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்துக்கு அமைவாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## நல்லூரில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பூசை



யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பூசை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றது.

இன்றிலிருந்து கந்த சஷ்டி விரதம் ஆரம்பமாகியுள்ள நிலையில் நாட்டில் தற்போது உள்ள கொரோனா அச்சநிலைமையின் காரணமாக ஆலயங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்பவரலாற்று பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயத்திற்குள் பக்தர்கள் எவரும் செல்லஅனுமதிக்கப்படவில்லை.

எனினும் வழமைபோன்று கந்தசஷ்டி விசேட பூசை வழிபாடுகள் ஆலயத்திற்குள் மட்டுப்படுத்தப்பட்ட பூசகர்களுடன் இடம்பெற்று வரும் நிலையில் பக்தர்கள் எவரும் நல்லூர் கோவிலுக்குள் அனுமதிக்கப்படாத நிலையில் பக்தர்கள் ஆலய வெளி வீதியில் நின்று கந்தனை தரிசித்து செல்கின்றனர்.

# சிறைச்சாலைகளில் 329 கொரோனா தொற்றாளர்கள்

நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் இருந்து 329 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

காலி, பூசா சிறைச்சாலைகளிலிருந்து நேற்றைய தினம் 44 புதிய கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

பூசா சிறையில் 25 அதிகாரிள் மற்றும் 107 கைதிகள் மீது வெள்ளிக்கிழமை பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்பட்டன. இந்த முடிவுகளிலேயே 44 புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்கள் அனைவரும் கந்தகாடு சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் பூசா சிறைச்சாலையில் ஏனைய கைதிகள் மற்றும் அதிகாரிகளையும் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர வெலிகட, போகம்பர, பூசா, மாத்தறை மற்றும் குருவிட்ட சிறைச்சாலைகளிலிலும் கொரோனா நோயாளர்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதாக சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## சமூக இடைவெளியைப் பின்பற்றாத பேருந்து ஓட்டுனர் மற்றும் நடத்துனர் கைது



பேருந்தில் சமூக இடைவெளியை உறுதி செய்யத் தவறிய குற்றச்சாட்டில் பேருந்தொன்றின் ஓட்டுனர் மற்றும் நடத்துனர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து மதுகம வரை இயங்கும் பேருந்தொன்றில் சமூக இடைவெளிப் பின்பற்றப்படவில்லையென பாணந்துர பொலிஸ் நிலையத்தில் பயணிகளால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.


இதனையடுத்து, பேருந்தை சுற்றி வளைத்த பொலிஸார் ஓட்டுனர் மற்றும் நடத்துனரை கைது செய்துள்ளதுடன், குறித்த பேருந்தையும் கைப்பற்றியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தை மீறியதற்கான காணொலி சான்றுகள் பெறப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

இந்த நிலையில், குறித்த பேருந்தின் ஓட்டுனர் மற்றும் நடத்துனர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்பரவு பணி: சிறிதரன் மீது வழக்கு!





கிளிநொச்சி- கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்பரவு பணியில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடம் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

யுத்தத்தில் உயிர் நீத்த மாவீரர்களை நினைவு கூறும் நாள் எதிர்வரும் 27ஆம் திகதி தமிழ் மக்களினால் அனுஷ்டிக்கப்பட இருக்கின்றது.

இந்நிலையில் அதனை முன்னிட்டு இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை, கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தின் துப்பரவு பணிகள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, குறித்த சம்பவம் அறிந்து அவ்விடத்திற்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார், துப்பரவு பணிக்கு அனுமதி வழங்கியது யார் என வினவியதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர்.

# 2021 ஆண்டுக்கான பாடசாலை நாட்காட்டி

கொரோனாத் தொற்றின் காரணமாக இவ்வாண்டு பாடசாலை செயற்பாடுகள் பாதிக்கப்பட்டதன் காரணமாக 2021 இல் விடுமுறைகள் குறைக்கப்பட்ட பாடசாலை நாட்காட்டி கல்வியமைச்சினால் வெளியிடப் பட்டுள்ளது.

சுற்றறிக்கை இல 33/2020 இன்படி நாட்காட்டி சிங்கள தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளுக்காக வெளியிடப்பட்டுள்ளது.

**சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகள்:**
**முதலாம் தவணை**
**(முதல் கட்டம்)**

2021 ஜனவரி 04 திங்கட்கிழமை தொடக்கம் 2021 ஜனவரி 15 வெள்ளிக்கிழமை வரை (இரண்டு நாட்களும் உட்பட)

க.பொ.த சாதாரண தர பரீட்சைக்காக 16.01.2021 தொடக்கம் 31.01.2021 வரை விடுமுறை வழங்கப்படும்

**(இரண்டாம் கட்டம்)**

2021 பெப்ரவரி 01 திங்கட்கிழமை தொடக்கம் 2021 ஏப்ரல் 09 வெள்ளிக்கிழமை வரை (இரண்டு நாட்களும் உட்பட)

**இரண்டாம் தவணை**

2021 ஏப்பிரல் 19 திங்கட்கிழமை தொடக்கம் 2021 ஜூலை 30 வெள்ளிக்கழமை வரை (இரண்டு நாட்களும் உட்பட)

**மூன்றாம் தவணை**

2021 ஆகஸ்ட் 30 திங்கட்கிழமை தொடக்கம்
2021 டிசம்பர் 03 வெள்ளிக்கிழமை வரை

**முஸ்லிம் பாடசாலைகள்:**
**முதலாம் தவணை:**
**(முதல் கட்டம்)**

2021 ஜனவரி 04 திங்கட்கிழமை தொடக்கம்
2021 ஜனவரி 15 வெள்ளிக்கிழமை வரை (இரண்டு நாட்களும் உட்பட)

(க.பொ.த சாதாரண தர பரீட்சைக்காக 16.01.2021 தொடக்கம் 31.01.2021 வரை விடுமுறை வழங்கப்படும்)

**இரண்டாம் கட்டம்**

2021 பெப்ரவரி 01 திங்கட்கிழமை தொடக்கம் 2021 ஏப்பிறல் 09 வெள்ளிக்கிழமை வரை (இரண்டு நாட்களும் உட்பட)

**இரண்டாம் தவணை**

2021 மே 17 திங்கட்கிழமை தொடக்கம்
2021 ஆகஸ்ட் 25 புதன்கிழமை வரை (இரண்டு நாட்களும் உட்பட)

(2021 ஆகஸ்ட் 26,27 இரண்டு நாட்களும் விடுமுறை வழங்கப்படும்)

**மூன்றாம் தவணை**

2021 ஆகஸ்ட் 30 திங்கட்கிழமை தொடக்கம்
2021 டிசம்பர் 03 வெள்ளிக்கிழமை வரை

# கோப்பாய் துயிலுமில்ல பகுதியல் முறுகல்



யாழ்ப்பாணம் - கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் இன்றையதினம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது சற்று முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் நினைவேந்தல்

நிகழ்வுகள் துயிலும் இல்லத்திற்கு முன்பாக உள்ள பகுதியில் சில வருடங்களாக இடம்பெற்று வருகின்றது.

எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர் நாள் நினைவு கூறப்படவுள்ள நிலையில் குறித்த பகுதியில் இன்றையதினம் சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சிரமதான பணிகள் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் குறித்த பகுதிக்கு பொலிஸார" வருகை தந்ததை அடுத்து சற்று முறுல் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிஸார் திரும்பி சென்றதை அடுத்து சிரமதானப்பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டிருதமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## களுத்துறையில்...

பகுதியில் 77 பேரும், இங்கிரிய பகுதியில் 90 பேரும், களுத்துறை பகுதியில் 57 பேரும், மதுராவல பகுதியில் 51 பேரும், மதுகம பகுதியில் 67 பேரும், மில்லனிய பகுதியில் 37 பேரும், பாலிந்தநுவர பகுதியில் 11 பேரும்,பாணந்துறை பகுதியில் 69 பேரும், வாத்துவ பகுதியில் 63 பேரும், வலல்லாவிட பகுதியில் 22 பேரும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப் பட்டோரின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 583ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து இன்று மட்டும் 214 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இதுவரை பதினொராயிரத்து 324 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும் ஐயாயிரத்து 206 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றினால் இதுவரை 53 பேர் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரியாலைவாசிக்கு...

லண்டனிலிருந்து நாடு திரும்பிய அவர், கட்டாயத் தனிமைப்படுத்தலை முடித்து அரியாலையில் கடந்த இரண்டு மாதங்களாகத் தங்கியிருந்துள்ளார். அவர் கடந்த மாதம் கொழும்பு சென்று லண்டம் திரும்புவதற்கான பணிகளை முடித்து மீளவும் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

கடந்த 9ஆம் திகதி கொழும்புக்குச் சென்ற அவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஒப்படைப்பதற்காக கடந்த 11ஆம் திகதி புதன்கிழமை பிசிஆர் பரிசோதனை செய்த போது, கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதனால் அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் அரியாலையைச் சேர்ந்த 15 குடும்பங்களில் 61 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலின் பிரகாரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸாரினால் இந்த சுயதனிமைப்படுத்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

## யாழில் 600...

கொண்டவர்களை தொடர்ச்சியாக தனிமைப்படுத்தி

பிசிஆர் பரிசோதனையை மேற் கொள்வதற்கான நடவடிக்கையினை சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்டு வருகிறார்கள்.

யாழில் தொற்று சந்தேகத்தில் சுய தனிமைப்படுத்தப்படுபவர்கள் பிசிஆர் பரிசோதனையின் பின்னர் தனிமைப் படுத்தலிருந்து சுகாதாரபிரிவினரால் படிப்படியாக விடுவிக்கப்படுகிறார்கள்.

அத்துடன்ஏற்கனவே தொற்று அச்சம் காரணமாக முடக்கநிலையில் இருந்த மூன்று கிராமங்கள் விடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புகளைப் பேணிய சுமார் 600 குடும்பங்கள் இன்றைய புள்ளி விவரத்தின்படி சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள் ஏற்கனவே தனிமைப்படுத்தலில் இருந்தோரின் எண்ணிக்கையை விட சற்று குறைவாகவே காணப் படுகின்றது.

தற்போது இந்துக்களின் கந்தசஷ்டி விரதம் இடம் பெறுகின்றமையினால் ஆலயங்களில் ஆலய பூசகர் மற்றும் திருவிழா உபயகாரர்

உட்பட ஐவர் மட்டுமே ஆலயத்துக்குள் செல்ல அனுமதிக்குமாறு ஏற்கனவே சுகாதாரப் பிரிவினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் அதற்கேற்ப செயற்பட வேண்டும்.

யாழில் பொதுமக்கள் தொடர்ச்சியாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றி அநாவசிய மற்ற பயணங்களை தவிர்த்து ஒன்றுகூடல் களையும் தவிர்ப்பதன்

மூலமே யாழ்மாவட்டத்தில் தொற்று ஏற்படாதவதை கட்டுப்படுத்த முடியும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## பளை தம்பகாமத்தில்...

என்பவரே இனந்தெரியாத நபர்களால் வெட்டி கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுவருகின்றனர்.

## 250 பேருக்கு...

பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் ஆகியோரிடமும் வாக்கு மூலத்தை பதிவு செய்ததுடன் அங்கு வருகை தந்தவர்களிடமும் தரவுகளையும் பொலிசார் சேகரித்தனர்.

பொலிஸ் வாக்கு மூலத்தில் நாடாளுமன்ற உறுப்பினரிடம் நாடு பூராகவும் கொரோனா தொற்று நோயின் அபாயகரமான சூழலில் தற்போது 30 பேருக்கு மேல் நிகழ்வுகளில் கலந்து கொள்ள முடியாது என்பது

உங்களுக்கு தெரியாதா எனக் கேட்டபோது யாழ்ப்பாணத்தில் இந்த மாதத்தின் 6 ஆம் 8 ஆம் திகதிகளில் கொழும்பில் இருந்து வந்த அமைச்சர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் 250 பேருக்கு மேல் இரண்டு நாட்களிலும் கலந்து கொண்டனர்

அந்தக்கூட்டமானது சிறிய மண்டபத்தில் தான் நடைபெற்றது அந்த மண்டபத்தில் 250 பேருக்கு மேல் கூடலாம் என்றால் 7ஏக்கர் பரப்பளவு கொண்ட கூட்டத்தில் 30 பேருக்கு

கலந்து கொள்வதா உங்களுக்கு பிரச்சினை என்றும் அந்த கூட்டத்தை நடாத்திய போது பொலிசாருக்கு தெரியாதா எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் பொலிசாரிடம் கேள்வி எழுப்பினார்.

## இன்று கொரோனா...

தெரிவித்துள்ளார்.

அவர்கள் அனைவரும் பேலியகொடை கொரோனா தொற்றாளர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய மினுவங்கொடை மற்றும் பேலியகொடை கொவிட் கொத்தணியில் இதுவரை பதிவான மொத்த கொவிட் 19 தொற்றாளர்களின் எண்ணிக்கை 13,628 ஆக அதிகரித்துள்ளது.

## யாழில் சுயதனிமை...

சுகாதார மருத்துவ அதிகாரியினால் இந்த நடவடிக்கை இன்று ஞாயிற்றுக்கிழமை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சுகாதார நடைமுறைகளை மீறி பயணிகளை ஏற்றிச் சென்றதையடுத்த அந்த பேருந்துக்கான வழித்தட அனுமதிப்பத்திரமும் சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள இரண்டாம் எச்சரிக்கை நிலையின் கீழ் பேருந்தின் ஆசனங்களின்

எண்ணிக்கைக்கு அமைவாக மட்டுமே பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும். அத்தோடு பயணிகள் முகக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும்.

இந்த நடைமுறைகள் பின்பற்றப்படாத நிலையில் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை 750 வழித் தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து ஒன்றின்

சாரதி மற்றும் நடத்துனர் சுயதனிமைப்படுத்தப்பட்டு வழித்தட அனுமதியும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

## ஒரே குடும்பத்தை...

வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அவரது குடும்ப உறுப்பினர் அனைவரும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத் தப்பட்டனர்.

இந்நிலையில் தற்போது வெளியாகியுள்ள அவர்களின் பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகளிலேயே குறித்த 7பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அவர்களுடன் தொடர்புகளை பேணிய 10 குடும்பங்களை தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சில இடங்களில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீக்கப்பட்டது




கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாட்டில் தனிமைப் படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் சில பகுதிகள் இன்று (ஞாயிற்றுக் கிழமை) அதிகாலை 05 மணி முதல் தனிமைப்படுத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித் துள்ளது.

குருநாகல், களுத்துறை, கேகாலை மாவட்டங்களின் 7 பிரதேசங்களே இவ்வாறு தனி மைப்படுத்தில் இருந்து விடுவிக் கப்பட்டுள்ளன.

இதற்கமைய, குருநாகல் மாவட்டத்தின் குருநாகல் நகராட்சி மன்ற பகுதி, குளியாப்பிடிய பொலிஸ் பிரிவு ஆகிய பகுதிகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் ஹொரணை பொலிஸ் பிரிவு, இங்கிரிய பொலிஸ் பிரிவு, வேகட மேற்கு கிராமசேவகர் பிரிவு ஆகிய பகுதிகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தின் ருவன்வெல்ல பொலிஸ் பிரிவு, மாவனெல்லை பொலிஸ் பிரிவு ஆகிய பகுதிகளிலும் தனிமைப் படுத்தல் தளர்த்தப்பட்டுள்ளது.

ஏனைய தனிமைப்படுத்தப் பட்டுள்ள இடங்கள் அவ்வாறே தொடரும் எனவும் அறிவிக்கப்பட் டுள்ளது.

# மரத்தில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

திருகோணமலை - சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மரத்தில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலமொன்று நேற்றிரவு (14) மீட்கப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு மீட்கப்பட்டவர் மூதூர்-சம்பூர்-03 பகுதியைச் சேர்ந்த யோகைய்யா நித்தியன் (34 வயது) என பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

திருமணமாகி 3 மாதங்கள் ஆகிய நிலையில் சம்பூர் பிரதேசத்தில் உள்ள குளத்துக்கு அருகில் உள்ள மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில்

சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக சம்பூர் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும் உயிரிழந்தவரின் சடலத்தை பிரேதப் பரிசோதனைக்காகத் திருகோண மலை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



அத்துடன் மரணம் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் சம்பூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது சம்பவ இடத்திற்கு மூதூ ர் திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.ஜே. எம்.

நூருல்லா சடலத்தைப் பார்வையிட்ட தனை அடுத்து சடலத்தைப் பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பொலிஸ ாருக்கு கட்டளையிட்டுள்ளார்.

கடந்த ஜனவரி முதல் இன்று வரைக்கும் சம்பூர் பொலிஸ் பிரிவில் 10க்கும் மேற்பட்டோர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பதியப்பட்டுள்ளமையும் குறிப் பிடத்தக்கது.

# மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறுவதற்கான தடை நள்ளிரவுடன் நீக்கம்!

மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை இன்று (ஞாயிற்றுக்கிழமை) இரவு 12.00 மணியுடன் நீக்கவுள்ள தாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கொரோனா அச்சநிலைமை காரணமாக கடந்த 11 ஆம் திகதி நள்ளிரவு முதல் மேல் மாகாணத் திலிருந்து வெளியேறும் மற்றும் மேல் மாகாணத்திற்குள் பிரவேசிக்கும் அனைத்து பேருந்து சேவைகளும் இடைநிறுத்தப்பட்டன.

அதேவேளை, கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மேல் மாகாணத்தின் பல இடங்கள் தனிமைப்படுத்தல் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

# மதுரையில் தீ! 2 தீயணைப்பு வீரர்கள் உயிரிழப்பு!!




மதுரை- தெற்கு மாசி வீதியிலுள்ள ஜவுளிக்கடையில் ஏற்பட்ட தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்ட இரண்டு தீயணைப்பு வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

மதுரை தெற்கு மாசி வீதியில் உள்ள ஜவுளிக்கடையில் நேற்று (சனிக்கிழமை) நள்ளிரவு வேளையில் திடீரென தீ பற்றியுள்ளது.

குறித்த தீ ஏனைய பகுதிகளுக்கும் வேகமாக பரவியதால் அப்பகுதி முழுவதும் புகைமண்டலமாக காட்சியளித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து, தகவல் அறிந்து அவ்விடத்திற்கு வருகை வந்த தீயணைப்பு வீரர்கள், தீயை கட்டுப்படுத்தும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

இதன்போது, அந்த கட்டடம் திடீரென இடிந்து விழுந்துள்ளது. அந்த இடி பாடுகளில் சிக்கிய சிவராஜன் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகிய தீயணைப்பு வீரர் கள் பலத்த காயங்களுடன், வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டனர்.

ஆனாலும், அவர்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மட்டக்களப்பு வெல்லாவெளியில் கைக் குண்டு மீட்பு



மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவில் கீழ்உள்ள காக்காச்சி வெட்டை பிரதேசத்தில் தனியார் காணி யொன்றில் விவசாய நடவடிக்கைக்காக நிலத்தை வெட்டும்போது நிலத்தில்

புதைத்துவைக்கப்பட்ட பிளாஸ்டிக் பாத்திரம் ஒன்றிலிருந்து கைக் குண்டு ஒன்றை நேற்று சனிக்கிழமை (14ம் திகதி) மீட்கப்பட்டதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்

காக்காச்சிவெட்டை பிரதேசத்தில் தனியார் காணியில் விவிசாய நடவடிக் கைக்காக நிலத்தை சம்பவதினடான நேற்று சனிக்கிழமை வெட்டும்போது நிலத்தில் புதைத்துவைக்கப்பட்டிருந்த

பிளாஸ்டிக் பாத்திரம் ஒன்றல் கைக் குண்டு இருப்பதை கண்டு பொலிசாருக்கு தெரிவிக்கப்பட்டது

இதனையடுத்து பொலிஸ் நீதிமன்ற அனுமதியைப் பெற்று விசேட அதிரடிப் படை வெடிகுண்டு அகற்றும் பிரிவு மூலம் அதனை அகற்றுவதற்கு பொலிஸ ார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்

இது தொடர்பில் வெல்லாவெளி பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். இதேவேளை இப்பகுதி கடந்த காலத்தில் விடுதைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ருமேனியா கொரோனா வைத்தியசாலையில் தீ 10 பேர் உயிரிழப்பு

ருமேனியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் தீ விபத்து ஏற்பட்டதாகவும் பின்னர் அதை ஒட்டிய அறைக்கு தீ பரவியது என்றும் இதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் மருத்துவர் உட்பட 7 பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர்கள் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அத்தோடு கிழக்கு ருமேனிய நகர மான ஐயாசியில் உள்ள கொரோனா விற்கு சிகிச்சை வழங்கும் வைத்திய சாலைக்கு எஞ்சியிருக்கும் ஆறு நோயா ளிகள் மாற்றப்படுவார்கள் என்றும் சுகாதார அதிகாரிகள் குறிப்பிட் டுள்ளனர்.

